**ஜனவரி – 16**

# TNPSC துளிகள்

- இந்தியாவும் தென் கொரியாவும் 2030 ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற ஒரு இருதரப்பு வர்த்தக இலக்கை எட்ட உள்ளன.
    - விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்குவதன் மூலம் இந்த இலக்கை அடைய இயலும்.
- இந்திய ரயில்வேயின் மேற்கு ரயில்வே மண்டலத்தின் ரயில்வே பாதுகாப்புப் படை "Mission Amanat" என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
    - இரயில்வேப் பயணிகள் தங்களது இழந்த உடைமைகளைத் திரும்பப் பெறுவதை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் குழுவின் தலைவராக ரகுவேந்திர தன்வார் நியமிக்கப் பட்டுள்ளார்.
    - இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் குழுவின் முதன்மை நோக்கமானது வரலாற்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும், வழிகாட்டச் செய்வதும், வரலாற்றின் நோக்கம் மற்றும் வரலாற்றின் அறிவியல்சார் எழுதுதலை ஊக்குவிப்பதும் அதனை வளர்க்கச் செய்வதும் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## காதி - கையால் செய்யப்பட்ட காகிதச் செருப்புகள்





- காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையமானது சமீபத்தில் கையால் செய்யப்பட்ட, ஒருமுறை மட்டுமே பயன்படுத்த கூடிய காகிதச் செருப்புகள் மற்றும் முதல் முறையாக குழந்தைகள் அணியும் செருப்புகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- முதன்முறையாக இந்த ஆணையமானது குழந்தை அணியும் ஆடை தயாரிப்புகளையும் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது இயற்கை இழைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படுவதால், இது சுற்றுச்சூழலைப் பாதிப்பதில்லை.
- இந்த ஆணையமானது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சகத்தின் கீழ்


செயல்படுகிறது.

## ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் 2021 - 2022

- மத்தியக் கல்வித் துறை அமைச்சகம் இதை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தண்ணீர், சுகாதாரம் மற்றும் துப்புரவு தொடர்பான முன்மாதிரியான பணிகளை மேற்கொண்ட பள்ளிகளை அங்கீகரித்து, ஊக்கப்படுத்தவும், விருது வழங்கவும் இது உதவும்.
- இது கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் வரை அனைத்து வகைப் பள்ளிகளுக்கும் பொதுவானது.




## வங்கிகளில் குறை தீர்க்கும் அதிகாரிகளுக்கு வரும் புகார்களின் அதிகரிப்பு




- இந்திய ரிசர்வ் வங்கி தனது "2020-21 ஆம் ஆண்டிற்கான குறை தீர்க்கும் அதிகாரிகள் திட்டத்தின் வருடாந்திர அறிக்கையை" வெளியிட்டது.
- இது வங்கிகளில் குறை தீர்க்கும் அதிகாரிகள் பெறும் புகார்களின் அதிகரிப்பை

எடுத்துக் காட்டுகிறது.

- சண்டிகர், கான்பூர் மற்றும் டெல்லியில் அதிக புகார்கள் வந்துள்ளன.

## நாப்கின் இல்லாத பஞ்சாயத்து

- கேரளாவின் கொச்சியில் உள்ள கும்பலங்கி கிராமம் இந்தியாவின் முதல் மாத விடாய்க் கழிவுத் துணியற்ற (sanitary napkin-free) கிராமப் பஞ்சாயத்து ஆக மாற உள்ளது.
- இந்தக் கிராமம் இதற்கு முன்பு இந்தியாவின் முதல் மாதிரி சுற்றுலா கிராமம் என்ற ஒரு அங்கீகாரத்தினையும் பெற்றுள்ளது.

## ஆசியக் கோப்பைக்கான இந்திய மகளிர் ஹாக்கி அணி

- ஓமனின் மஸ்கட்டில் நடைபெற உள்ள 2022 ஆசியக் கோப்பைக்கான 18 பேர் கொண்ட இந்திய ஹாக்கி அணிக்கு சவிதா புனியா கேப்டனாக இருப்பார்.
- இந்தோனேசியா, சீனா, மலேசியா, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் 2022 ஆம் ஆண்டிற்கான ஆசியக் கோப்பை மகளிர் அணி ஹாக்கிப் போட்டியில் போட்டியிடுகின்றன.
- இந்திய மகளிர் அணி இந்தப் போட்டியின் நடப்பு சாம்பியன் ஆகும்.




## பாதிக்கப்படக்கூடிய சாட்சி வைப்பு மையம் திட்டம்

- தங்கள் மாநிலங்களில் பாதிக்கப்படக்கூடிய சாட்சி வைப்பு மையம் (VWDC - Vulnerable Witness Deposition Centre) என்ற ஒரு திட்டத்தை உருவாக்க தேவையான மனிதவளத்தின் மதிப்பீட்டை மூன்று மாதங்களுக்குள் வழங்குமாறு நாட்டின் உயர் நீதிமன்றங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்த மையம் பாதிக்கப்படக் கூடியவர்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய ஒரு பாதுகாப்பானச் சூழலை உருவாக்கும்.
- ஒரு மாவட்டத்தில் குறைந்தபட்சம் இவ்வாறான ஒரு மையமாவது நிறுவப்பட வேண்டும்.
- பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர்களை, பாதிக்கப்படக்கூடிய சாட்சிகளாக உச்ச நீதிமன்றம் சேர்த்துள்ளது.
- பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 377வது பிரிவின் படி வரையறுக்கப் பட்டுள்ளனர்.

*மற்ற பாதிக்கப் படக்கூடியவர்கள் பின்வருமாறு*

- பாலின வேறுபாடின்றி, பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள்
- மனநலப் பாதுகாப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள வகையில் மனநோயால் பாதிக்கப் பட்ட சாட்சிகள்
- செவித் திறன் குறைபாடு அல்லது பேச்சுக் குறைபாடுள்ள நபர்கள்
- நீதிமன்றங்களால் வரையறுக்கப்பட்ட பிற குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட நபர்கள்

## தென் கொரியாவின் POSCO உடன் ஒப்பந்தம்

- அதானி குழுமம் மற்றும் தென் கொரியாவின் ஒரு மிகப்பெரிய எஃகுத் தயாரிப்பு நிறுவனமான POSCO ஆகியவை இந்தியாவில் வணிக வாய்ப்புகளை ஆராய்வதற்காக பிணைப்பு இல்லாத புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.
- குஜராத்தின் முந்த்ராவில் பசுமையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த எஃகு ஆலையை நிறுவுவதும் இதில் அடங்கும்.




## மனிதர்கள் சுமந்து செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை






- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது மனிதர்கள் சுமந்து செல்லக் கூடிய பீரங்கி எதிர்ப்பு வகை ஏவுகணையை (MPATGM - Man-Portable Anti-Tank Guided Missile) வெற்றிகரமாக சோதனை செய்தது.
- MPATGM ஆனது தெலுங்கானாவின் பானூரில் உள்ள பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்படும்..
- MPATGM என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பீரங்கி எதிர்ப்பு வகையிலான, குறைந்த எடை கொண்ட மற்றும் இயக்கிய பின் தன்னைத் தானே இலக்கை நோக்கி

செல்லும் வகையில் இயக்கிக் கொள்ளும் ஒரு ஏவுகணையாகும்.

- இது மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையாகும்.
- இது நாக் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையிலிருந்துப் பெறப்பட்டது.
- ஒருங்கிணைந்த வழி காட்டப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு தளங்களில் இருந்து இதை ஏவ முடியும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு 2022




- சமீபத்திய ஹென்லி பாஸ்போர்ட் குறியீட்டில் இந்தியா ஏழு இடங்கள் முன்னேறி 111 நாடுகளில் 83வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில், 116 நாடுகளில் இந்தியா 90வது இடத்தைப் பிடித்தது.
- இந்தியப் பாஸ்போர்ட் ஆனது 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உலகளவில் 60 இடங்களுக்கு விசா இல்லாத அணுகலைக் கொண்டுள்ளது.
- ஓமன் மற்றும் ஆர்மீனியா ஆகியவை இந்தியப் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் விசா பெறாமல் செல்லக் கூடிய இடங்களாக இந்தப் பட்டியலில் இறுதியாக சேர்க்கப்பட்டு உள்ளன.
- பாஸ்போர்ட் மூலம் உலகளவில் விசா இல்லாமல் 192 இடங்களுக்குச் செல்லக் கூடிய வகையில் ஜப்பானும் சிங்கப்பூரும் இதில் கூட்டாக முதலிடத்தைத் தக்க வைத்துள்ளன.
- ஆப்கானிஸ்தான் 26 இடங்களுக்கு மட்டுமே செல்லக் கூடிய பாஸ்போர்ட்டுடன் இறுதி இடத்தில் உள்ளது.
- ஹென்லி என்பது லண்டனை மையமாகக் கொண்ட உலகளாவியக் குடியுரிமை மற்றும் குடியிருப்பு ஆலோசனை நிறுவனமாகும்.

## கிளைவ் லாயிட்

- மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கிளைவ் லாயிடுக்கு நைட்ஹூட் (மாவீரர்) விருது வழங்கப்பட்டுள்ளது.

- இந்த விருது இங்கிலாந்தின் பெர்க்சையரில் உள்ள வின்ட்சர் கோட்டையில் கேம்பிரிட்ஜ் நகரத்தின் பிரபு (டியூக்) மூலம் வழங்கப் பட்டது.
- 1975 மற்றும் 1979 ஆகிய ஆண்டுகளின் உலகக் கோப்பையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மேற்கிந்தியத் தீவுகள் கோப்பையை வென்றது லாயிட் தலைமையின் கீழ்தான்.



## கஜகஸ்தான் அமைதியின்மை

Collective Security Treaty Organization (CSTO)




- கஜகஸ்தானில் இருந்து ரஷ்யா தலைமையிலான அமைதிப்படை வெளியேறுகிறது.
- கஜகஸ்தான் நாட்டு ஜனாதிபதி காசிம்-ஜோமார்ட் டோகாயே என்பவரின் வேண்டுதல் படி கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் (CSTO - Collective Security Treaty Organization)

தலையீட்டிற்குப் பிறகு கஜகஸ்தானில் அமைதியின்மையை நிர்வகிக்க இது அனுப்பப் பட்டது.

- CSTO என்பது ரஷ்யா, ஆர்மீனியா, பெலாரஸ், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டணியாகும்.

## இளவரசர் ஆண்ட்ரூ

- யார்க் நகரத்தின் பிரபுவான இளவரசர் ஆண்ட்ரூவிடமிருந்து அனைத்து இராணுவ மற்றும் அரசப் பட்டங்களும் அவரிடமிருந்துப் பறிக்கப்பட்டன.
- அவர் பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் வாரிசு வரிசையில் ஒன்பதாவது வரிசை ஆவார்.
- அவர் ராணி இரண்டாம் எலிசபெத் மற்றும் எடின்பர்க் பிரபுவான இளவரசர் பிலிப் என்ற தம்பதியினரின் மூன்றாவது குழந்தை மற்றும் இரண்டாவது மகன் ஆவார்.
- இதன் பொருள் யார்க் நகரின் பிரபு இனி "மேதகு அரச மேன்மை பொருந்திய" (His Royal Highness) என்று அழைக்கப்பட மாட்டார்.




## சமத்துவமின்மை நிலை அறிக்கை

- இது உலக சுகாதார அமைப்பினால் தயாரிக்கப்பட்டது.
- எச்.ஐ.வி, காசநோய் மற்றும் மலேரியா தொடர்பான நோய்க் குறிகாட்டிகளில் மிகவும் ஏழ்மையான, குறைந்த கல்வியறிவு மற்றும் கிராமப்புற துணைக் குழுக்கள் பின்தங்கிய நிலையில் உள்ளன.
- இந்த அறிக்கை 186 நாடுகளில் இருந்து 32 சுகாதாரக் குறிகாட்டிகளைக் கொண்டு அதனை ஆராய்கிறது.
- காசநோய், எச்ஐவி மற்றும் மலேரியாவின் பரவலில் ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதன் தாக்கத்தையும் இந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- 2019 மற்றும் 2020 ஆண்டுக்கு இடையில் 25 சதவிகிதம் "காசநோய்க்கான வருடாந்திர நிலையில் மிகப்பெரிய குறைப்பு" என்பதை நிகழ்த்திய நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

- உலகில் மொத்த காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் இந்தியா 26.2 சதவீததத்தினைக் கொண்டுள்ளது.
- காசநோய்க்கு எதிரான BCG தடுப்பூசியில் கல்வி தொடர்பான ஏற்றத் தாழ்வுகளை வெகுவாக நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

## உலகளாவிய கல்வி நெருக்கடி நிலை: மீட்சிக்கான பாதை

- இது உலக வங்கி, யுனெஸ்கோ மற்றும் யுனிசெஃப் ஆகியவை இணைந்து வெளியிட்ட ஒரு ஆய்வு அறிக்கையாகும்.
- தொற்றுநோயால் ஏற்படும் தாக்கமானது முன்னர் மதிப்பிடப்பட்டதை விட மிகவும் கடுமையானதாக இருக்கலாம் என்றும் ($ 17 டிரில்லியன்) மற்றும் $10 டிரில்லியன் என்ற முன்னால் மதிப்பிடப்பட்ட அளவை அது மீறுகிறது என்றும் இது கூறுகிறது.
- பிரேசில், கிராமப்புற இந்தியா, பாகிஸ்தான், மெக்சிகோ, தென்னாப்பிரிக்கா போன்ற பல நாடுகள் கணிதம் மற்றும் வாசிப்பில் கணிசமான இழப்பைக் காட்டியுள்ளன.




## வளரும் நாடு குறிச்சொல்

- உலக வர்த்தக அமைப்பானது சமீபத்தில் "வளரும் நாடு" குறிச்சொல்லை வழங்கியது.
- "வளர்ந்த" அல்லது "வளரும்" நாடுகளுக்கு என்று அதிகாரப்பூர்வமாக எந்த ஒரு வரையறையையும் உலக வர்த்தக அமைப்பு உருவாக்கவில்லை.
- இருப்பினும், இம்மாதிரியான ஒரு குறிச்சொல் கூறப்படும் போது, மற்ற நாடுகள் அதை எதிர்த்து முறையிடலாம்.

- உலக வர்த்தக அமைப்பானது இதற்கான வரையறையை வழங்கவில்லை என்றாலும், அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் தங்களை வளரும் நாடுகள் என்று கூறிக் கொள்கின்றன.
- உறுப்பு நாடுகள் தங்களை வளர்ச்சியடைந்தும் வரும் ஒரு நாடாக அறிவித்துக் கொள்ள முடியும் என்பதால், சீனா தன்னைத் தானே வளர்ச்சியடைந்து வரும் ஒரு நாடாக அறிவித்துக் கொள்ள இது சாதகமாக உள்ளது.
- மேலும், சீனா தற்போது உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்காக சீனா இருந்தது.
- இதற்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

**Matter of choice**

WTO allows member countries to classify themselves as "developed" or "developing". However, other members can challenge the decision of a country to be classified as "developing". Only the "least-developed countries" status is designated by the UN. Countries in the three lists:

| Developing | Developed | Least-developed countries |
|---|---|---|
| India | U.S. | Afghanistan |
| China | European Union | Bangladesh |
| Russia | Japan | Bhutan |
| Brazil | Canada | Myanmar |
| South Africa | Australia | Nepal |
| South Korea | New Zealand | South Sudan |

## உலகளாவிய தனியார் வங்கி விருதுகள் 2021




- உலகளாவிய தனியார் வங்கி விருதுகள் 2021 என்ற விருதில் ஹெச்டிஎஃப்சி வங்கி இந்தியாவின் 'சிறந்த தனியார் வங்கி' என்று பெயரிடப்பட்டுள்ளது.


- இதைத் தொழில்முறைச் செல்வ மேலாண்மை (Professional Wealth Management) என்ற ஒரு அமைப்பானது ஏற்பாடு செய்தது.

## நாணயத்தில் பொறிக்கப்பட்ட முதல் கறுப்பினப் பெண்

- அமெரிக்காவின் நாணயத்தில் தோன்றிய முதல் கறுப்பினப் பெண் மாயா ஏஞ்சலோ என்பவர் ஆவார்.
- இவர் ஓர் ஆப்பிரிக்க அமெரிக்கர் ஆவார்.




## உலகளாவிய அபாயங்கள் அறிக்கை 2022




- உலகப் பொருளாதார மன்றமானது 2022 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய அபாயம் என்ற ஒரு அறிக்கையைச் சமீபத்தில் வெளியிட்டது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில், பெருந்தொற்றுக் காலத்தில், உலகின் முதல் 20% (பணக் காரர்கள்) தங்கள் இழப்புகளை மீட்டெடுத்துள்ளனர்.
- மறுபுறம், அடிமட்டத்தில் உள்ள 20% பேர் மேலும் 5% இழந்துள்ளனர்.
- சுற்றுச்சூழல் அபாயங்கள் நீண்ட காலம் மற்றும் குறுகிய காலத்திற்கு ஆதிக்கம்

செலுத்தும்.

- காலநிலை சார்ந்த மீட்பு நடவடிக்கையின் தோல்வி, தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் பல்லுயிர் இழப்பு ஆகியவை அடுத்த தசாப்தத்தில் உலக மக்கள்தொகைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக நிபுணர்களால் உணரப் படுகிறது.
- மனித சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் இயற்கை வள நெருக்கடி போன்ற சுற்றுச்சூழல் காரணிகளும் இந்தக் காலகட்டத்தில் முதல் 10 இடர்களில் ஒன்றாக இருப்பதாக நம்பப் படுகிறது.
- இணையதளப் பாதுகாப்பு, பெருந்தொற்று மற்றும் விண்வெளி முன்னேற்றங்களும் உலகப் பொருளாதாரத்திற்கு அபாயங்களாக விளங்குகின்றன.

## உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை

- இது உலக வங்கியால் வெளியிடப்பட்டது.
- உலகப் பொருளாதார வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 4.1% ஆகக் குறையும் என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வளர்ந்து வரும் சமத்துவமின்மை ஆகிய சில காரணிகளால் ஏற்படும் அபாயங்களையும் இது குறிப்பிடுகிறது.
- இருப்பினும், இந்தியா மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு பிரகாசமான இடத்தில் உள்ளது.
- 2021-2022 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஆண்டு வளர்ச்சி 8.3% ஆக இருக்கும் என்று இது கணித்துள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## காலாண்டு வேலைவாய்ப்பு கணக்கெடுப்பின் இரண்டாம் சுற்று


- இதனைச் சமீபத்தில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பின்படி, ஒன்பது துறைகள் இரண்டு லட்சம் பேரை வேலைக்கு அமர்த்தியுள்ளன.
- இது நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் 85% (3.10 கோடி) ஆகும்.
- இந்தக் கணக்கெடுப்பானது 2021 ஆம் ஆண்டின் ஜூலை முதல் செப்டம்பர் மாதங்கள் வரையிலானது ஆகும்.
- QES (Quarterly Employment Survey) என்பது அகில இந்தியக் காலாண்டு காலத்திற்கான

நிறுவனங்கள் அடிப்படையிலான வேலைவாய்ப்பு ஆய்வின் ஒரு பகுதியாகும்.

- இது தேவை (demand) மீது கவனம் செலுத்துகிறது.
- மறுபுறம், தொழிலாளர் கணக்கெடுப்பானது தொழிலாளர் சந்தையின் விநியோகம் மீது கவனம் செலுத்துகிறது.




## பணப்புழக்கப் பரவு விகிதம் பராமரிப்பு




- இந்திய ரிசர்வ் வங்கியானது பணப்புழக்கப் பரவு விகிதத்தை (LCR - Liquidity Coverage Ratio) பராமரிக்க வங்கிகளுக்கான வரம்பை அதிகரித்துள்ளது.
- இது 5 கோடி ரூபாய் முதல் 7.5 கோடி ரூபாய் வரை நிதி அல்லாத சிறு வணிக வாடிக்கையாளர்களிடமிருந்துப் பெறப்பட்ட வைப்புத் தொகை மற்றும் பிற 'நிதி

நீட்டிப்பு' மீது இருக்கும்.

- பிராந்திய கிராமப்புற வங்கிகள், உள்ளூர் பகுதி வங்கிகள் மற்றும் பண வழங்கீட்டு வங்கிகள் (Payments Banks) தவிர மற்ற அனைத்து வணிக வங்கிகளுக்கும் இது பொருந்தும்.
- இது ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களை வங்கிகள் மேற்பார்வைக்கான பேசல் குழுவின் தரநிலையுடன் இணங்கி, பணப்புழக்கச் சிக்கல்களை வங்கிகள் திறம்பட நிர்வகிக்க உதவுகிறது.
- பணப்புழக்கப் பரவு விகிதமானது சாத்தியமான பணப்புழக்கத் தடைகளுக்கு வேண்டி வங்கிகளின் குறுகிய கால மீட்சியை ஊக்குவிக்கிறது.
- 30 நாட்கள் என்ற கால அளவு நீடிக்கும் கடுமையான அழுத்த சூழ்நிலையைத் தாக்குப் பிடிக்க போதுமான உயர்தரத்திலான அதிகப் பணப் புழக்கம் கொண்ட சொத்துக்கள் அவர்களிடம் இருப்பதை இது உறுதி செய்யும்.

## RBI மற்றும் fintech

- இந்திய ரிசர்வ் வங்கி ஃபின்டெக் (நிதித் தொழில்நுட்பம்) என்பதற்காக ஒரு தனித் துறையை அமைத்துள்ளது.
- இது அந்தத் துறையில் புதுமைகளை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் அதனுடன் தொடர்புள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களைக் கண்டறிந்து அவற்றைச் சரியான நேரத்தில் சரி செய்ய உதவும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அசாமில் ஒராங்

- ஒராங் தேசியப் பூங்காவின் பரப்பளவை அதிகரிக்க அசாம் அரசு சமீபத்தில் முடிவு செய்துள்ளது.

- ஒராங் தேசியப் பூங்காவானது காண்டாமிருகத்தின் ஒரு முக்கிய வாழ்விடமாகும்.
- பிரம்மபுத்ராவின் வடக்குக் கரையில் உள்ள ஒராங் பகுதியானது காசிரங்கா ஒராங் நதிக் கரை நிலப்பரப்புக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும்.
- 1972 ஆம் ஆண்டின் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டமானது மாநில அரசால் முடிவு செய்யப்பட்ட வனப்பகுதிக்குள் அடங்கிய பகுதியானது வனவிலங்குச் சரணாலயம் மற்றும் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்படுகிறது என்று கூறுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் விருது 2022

- ஹர்ஷாலி மல்ஹோத்ராவுக்கு 12வது பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் விருது 2022 என்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா அரசானது 2022 ஆம் ஆண்டிற்கான பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் தேசிய விருதுகள் விழாவை ஏற்பாடு செய்தது




## அருந்ததி பட்டாச்சார்யா பற்றிய புத்தகம்

- ஹார்பர் காலின்ஸ் அருந்ததி பட்டாச்சார்யாவின் சுயசரிதையான “இன்டோமிட்டபிள்: எ உர்க்கிங் வுமன்ஸ் நோட்ஸ் ஆன் லைஃப், ஒர்க் அண்ட் லீடர்ஷிப்” என்ற புத்தகத்தை

வெளியிட உள்ளது.

❖ அவர் ஓய்வு பெற்ற இந்திய வங்கியாளர் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் முதல் பெண் தலைவர் ஆவார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★